மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு ஒரு விளக்கத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட காலமாக, பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டால் போதும், சுற்றுச் சுவர் தேவையில்லை என்ற கருத்துதான் நிலவியது. குறிப்பாக, கிராமங்களிலே உள்ள பள்ளிகளுக்கு கிராமமேதான் சுற்றுச் சுவர். கிராமத்திலே இருக்கின்ற எல்லா மக்களும் அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் பாதுகாவலர்கள். நகரங்களிலேதான் நெருக்கடி ஏற்பட்டு, பள்ளிக்கூட இடத்தை மற்றவர்கள் கைக்கொண்டுவிடுவார்கள்; எடுத்துக்கொண்டுவிடுவார்கள் அல்லது குடியிருக்க வந்துவிடுவார்கள் என்பதற்காகச் சுற்றுச் சுவர் தேவைப்பட்டது. நெருக்கமான இடத்திலேதான் சுற்றுச் சுவர் தேவை. மற்ற பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் தேவையில்லை. அப்படியே தேவை என்றாலும் ஒரு வரம்பு காட்டுவதற்காக மர வேலி வைக்கின்ற முறையிலே, மரங்களைக்கொண்டு, கிளுவை போன்ற மரங்களைக்கொண்டு, ஆடாதொடா போன்ற மரங்களைக்கொண்டு, ஓர் அடையாளத்திற்கு வேலி வைப்பார்கள். பெண்கள் கல்வி கற்கத் தொடங்கியதற்குப் பின்னர்தான், அதிக அளவிற்குச் சுற்றுச் சுவர் இருந்தால் நல்லது என்ற கருத்து அண்மைக் காலத்திலே ஏற்பட்டது. படிப்படியாகத்தான் சுற்றுச் சுவர் கட்டுகின்ற கடமையை அரசு செய்ய முடியும். அதற்குமேல் தேவையானால் பொதுமக்கள்தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Second supplementary கிடையாது. அடுத்து வினா வரிசை எண் 97. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

97—

தடுப்புச் சுவர்

***11134—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் ஏரிப் பகுதியில் ராசிபுரம் முதல் ஆத்தூர் சாலை வரை தடுப்புச் சுவர் கட்டி அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 8]

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் முதல் ஆத்தூர் சாலை கி.மீ. 1/2 – கி.மீ. 3/650 வரையுள்ள சாலைப் பகுதியில் ராசிபுரம் ஏரிப் பகுதியை மேம்பாடு செய்து, கி.மீ. 1/4 மற்றும் 1/8–ல் சிறிய இரண்டு பாலங்கள் அமைக்க, ரூபாய் 75 இலட்சத்திற்கு 2006–2007 ஆம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ், நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது புதிதாகத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசிபுரம் முதல் ஆத்தூர் செல்லும் சாலையானது, ராசிபுரம் நகராட்சி எல்லை கோனேரிப்பட்டி ஏரியில் அமைந்துள்ளது. சாலை மிகவும் குறுகலாக 7 மீட்டர் அகலம் உள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள வாகனப் பெருக்கத்தின் காரணமாக, தினந்தோறும் அந்தச் சாலையிலே ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் சென்றுவருவதால், மேலும் அந்த ஏரியின் இருபுறமும் பள்ளமாக இருக்கின்ற காரணத்தால், அடிக்கடி சாலை விபத்துகள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட நேரில் பார்வையிட்டு, மொத்தமுள்ள 850 மீட்டர் சாலையில், கூடுதலாக சுமார் 8 மீட்டர் அகலத்திற்கு 620 மீட்டர் தூர சாலையில் தடுப்புச் சுவர் அமைத்துப் பணிகளை நிறைவேற்றித் தந்துள்ளார்கள். அது வாகன ஓட்டுநர்களிடையே பெரும் வரவேற்பையும், பாராட்டுதலையும் பெற்றுள்ளது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள சுமார் 260 மீட்டர் சாலையை இந்த ஆண்டு அகலப்படுத்தித் தருவார்களா? மேலும், சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த ராசிபுரம் புறவழிச் சாலை அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2009 ஜூலை 8

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசிபுரம் முதல் ஆத்தூர் வரை செல்லும் அந்தச் சாலையில் ஏரியை ஒட்டியுள்ள பகுதியில் இரண்டு பக்கங்களிலும் மண் சரிந்து சாலையில் விபத்துகள் ஏற்படுகின்றன என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காகத்தான் கடந்த 2 ஆண்டுகளாக அந்த இடத்தில் பணிகள் மேம்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. மீதமிருக்கின்ற பணிகளையும் நிதிநிலைக்கேற்ப இந்த அரசு பரிசீலிக்கும். அதேபோல, ராசிபுரத்திற்கான புறவழிச் சாலை எந்த நிலையில் உள்ளது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு ஏற்பட்ட பிறகு, ராசிபுரம் நகருக்குப் புறவழிச் சாலை அமைக்க உத்தரவு வழங்கப்பட்டு, அதற்குரிய நில எடுப்புப் பணிகள், ஏறத்தாழ நேர்பாடு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இறுதி ஒப்புதலை வழங்கியிருக்கிறார்கள். விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. எனவே, விரைவில் அந்தச் சாலைப் பணி தொடங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் தெரிவித்த அறிவிப்புக்கு நன்றி கூறி. இந்த ஆண்டே அந்தப் புறவழிச் சாலையை அமைக்கும் பணியைத் தொடங்கித் தருமாறு தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006–2007 ஆம் ஆண்டு முதல் நிதிநிலை அறிக்கையில், திருப்பூரினுடைய சுற்றுச் சாலைகளை மேம்படுத்தவும், நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்காக பாலங்கள் கட்டுவதற்கும் சுமார் 70 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, அதனுடைய பெரும் பகுதியான பணிகள் நடைபெற்று நிறைவுபெற்றும் இருக்கின்றன. அதிலே இரயில்வே மேம்பாலங்கள் இரண்டு இடம்பெற்றன. அதன் பிறகு, அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே,

2009 ஜூலை 8]

மேலும் 3 இரயில்வே மேம்பாலங்கள், திருப்பூர் பகுதிக்கு என்று அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால் 5 இரயில்வே மேம்பாலங்களுக்கு திருப்பூர் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளுக்கு அரசு அனுமதி வழங்கியும் இதுவரையில் அந்தப் பணிகள் துவக்கப்படவில்லையே, இதற்கு இரயில்வே நிருவாகத்தினுடைய செயல்பாடுகள் காரணமா? நெடுஞ்சாலைத் துறையின் அணுகுமுறை காரணமா? எதனால் இந்தக் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை அறிய விரும்புவதோடு, திருப்பூரினுடைய போக்குவரத்து நெரிசலைக் கருதி, விரைவாக அந்த இரயில்வே மேம்பாலங்கள் கட்டுகிற பணிகள் துவக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திருப்பூர் நகரிலுள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு ஏற்பட்ட பிறகு, அங்கு இருக்கக்கூடிய சுற்றுச் சாலைகள், திருப்பூர் நகரை இணைக்கக்கூடிய ஆரச் சாலைகளையெல்லாம் மேம்பாடு செய்வதற்கு, அகலப்படுத்துவதற்கு, அதேநேரத்தில் சில பாலங்கள் கட்டுவதற்கும், குறுகலான பாலங்களையெல்லாம் அகலப்படுத்துவதற்கும், அதிலே இரண்டு இரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்கும் முடிவு செய்யப்பட்டது, ஒன்று கூலிபாளையம் இரயில்வே கடவில் சாலை மேம்பாலமும், மற்றொன்று சிக்கண்ணக்கல்லூரி அருகிலே ஒரு சாலை மேம்பாலமும் கட்டுவதற்காக ஒப்புதல் வழங்கப்பட்டது உண்மை. அதிலே சாலைப் பணிகள் பெருமளவில் முடிவுற்றதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பாலப் பணிகளைப் பொறுத்த அளவில், ஏறத்தாழ 70 சதவிகிதப் பணிகள் முடிவுற்றிருக்கின்றன. இரயில்வே பாலங்களைப் பொறுத்த அளவில், இன்னொரு துறையோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இரயில்வே துறையோடு இணைந்து செய்ய வேண்டிய ஒரு பணி. எனவே, இது தொடர்பாக இரண்டு, மூன்று முறை நம்முடைய மாண்புமிகு இரயில்வே துறையினுடைய இணை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. வேலு அவர்களும், நாங்களும் இணைந்து நம்முடைய தலைமைச்

செயலகத்திலேயே ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, அதிலிருக்கக்கூடிய நிருவாகச் சிக்கல்களைத் தீர்த்து வைத்ததுடன், ஒருமித்த கருத்தை எட்டியதன் காரணமாக பணிகள் வேகமாக நடைபெற்று, இந்த 3 ஆண்டுக் காலத்திலே பல பாலப் பணிகளைச் செயல்படுத்தி இருக்கிறோம்; திறந்துவிடப்பட்டிருக்கின்றன. அதேபோல திருப்பூரில் இரண்டு பாலங்களையும், கொங்கு நகரிலே வரவிருக்கின்ற பாலங்களையும் விரைந்து செய்வதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலே, திண்டிவனம்–திருச்சி நெடுஞ்சாலை, நான்கு வழிச் சாலையாக இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஒரு முறை உங்களிடம் கேட்டிருக்கின்றேன். கூட்டேரிப்பட்டிலே ஒரு Ring Road போடுவதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டது. பிறகு, மேம்பாலம் போடப்படுவதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இன்று வரை—அந்தச் சாலை திறக்கப்பட்டுவிட்டது—அங்கு மேம்பாலமும் போடவில்லை, அங்கு வட்டச் சாலையும் போடப்படாததால் தினந்தோறும் கிட்டத்தட்ட, இந்த 2 மாத காலத்திலேயே 20, 25 பேர் சாலை விபத்திலே இறந்திருக்கின்றார்கள்.

தினந்தோறும் அங்கு சாலை விபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான வாகனங்கள் அங்கே சென்று கொண்டிருக்கின்றன. நான்கு முனை சந்திப்பு. இந்தப் பக்கம் பாண்டிச்சேரிக்குச் செல்ல வேண்டும். திருவக்கரை சாலைக்குச் செல்ல வேண்டும். B.D.O. Office–க்குச் செல்ல வேண்டும், மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். அந்தப் பக்கம் பள்ளிக்கு மாணவர்கள் செல்ல வேண்டும். கிட்டத்தட்ட 200 கிராமங்கள் அதனாலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த அரசு, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் சொல்லி ஒரு வட்டச் சாலையை அல்லது ஒரு மேம்பாலத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், விழுப்புரம் செல்கின்ற வரையிலும் பார்த்தால், சிறிய கிராமமான சிந்தாமணி கிராமத்திலே இந்தக் கிராமத்திலிருந்து அந்தக் கிராமத்தில் ஒரு தெருவிற்குப் போவதற்குக்கூட ஒரு குறுக்குப் பாலம் போடப்பட்டிருக்கிறது. போட வேண்டாமென்று நான் சொல்லவில்லை; போட்டிருக்கிறார்கள். ஆனால், இங்கே நான்கு

2009 ஜூலை 8]

வழிச் சந்திப்பு; கிட்டத்தட்ட 200 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன; இதைச் செய்வதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திருச்சி செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய கட்டுப்பாட்டிலே எடுக்கப்பட்ட நான்கு வழிச் சாலையாக மாற்றப்பட்டு வருகிறது. ஏறத்தாழ பணிகளும் இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கின்றன. இதிலே, மாநில அரசு பரிந்துரைதான் செய்ய முடியும். எனவே, இது தொடர்பாகப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. வலியுறுத்தப்பட்டும் இருக்கிறது. மேம்பாலம் அமைத்துத் தருவதாகக் கொள்கை அளவிலான ஒப்புதலும் வழங்கியிருக்கிறார்கள். எனவே, அந்தப் பாலப் பணி தொடங்க, பாலம் அமைய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராம்பிரபு.

திரு. இரா. இராம்பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2007–2008 ஆம் ஆண்டில், நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, பரமக்குடி நகரில், வைகை ஆற்றுப் பகுதியில் புதிதாக ஒரு மேம்பாலம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், இன்று வரை 2 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், அந்தப் பாலம் அமைக்கப்படவில்லை. வரக்கூடிய இந்த நிதியாண்டில், அந்த சர்வே பணிகள் எல்லாம் முடிந்து—இந்த நிதியாண்டிலாவது அந்தப் பாலம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தப் பரமக்குடி மேம்பாலம் குறித்து நான் நேரடியாக அந்த இடத்தையே பார்வையிட்டு வந்திருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதல் பெற்று, நபார்டு வங்கியினுடைய நிதி உதவியை எதிர்பார்த்து அறிவிக்கப்பட்ட பாலம். நபார்டு வங்கியினுடைய நிதியுதவி பெறுவதில் காலதாமதமான காரணத்தால், நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், 'அதை மாநில அரசினுடைய நிதியிலே மேற்கொள்ளுங்கள்; அதற்குப் பிறகு நபார்டு வங்கியின் நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்' என்று சொல்லி அனுமதி வழங்கி இருக்கிறார்கள். கட்டடங்கள் அதிகமான பகுதியாக இருப்பதாலும் குறுகிய பகுதியாக இருக்கிற காரணத்தினாலும், நேர்பாடு செய்து, முடிவு செய்வதிலே காலதாமதம் ஆனது. அதேநேரத்திலே, அந்தப் பழைய குறுகலான பாலத்தைக்கூட அப்புறப்படுத்திவிட்டு, அந்த இடத்திலே கட்ட வேண்டிய சூழ்நிலையெல்லாம் வடிவமைப்பிலே ஏற்பட்ட காரணத்தால், கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டதேயொழிய, வேறு ஒன்றும் காரணம் இல்லை. மாண்புமிகு உறுப்பினரும், மாண்புமிகு குடிசை மாற்று வாரியத் துறை அமைச்சரும் இதை நன்கு அறிவார்கள். எனவே, அந்த மேம்பாலத்தை இந்த ஆண்டு கட்டுவதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தலைவாசல் தொகுதியில், கம்பம்பட்டியிலிருந்து செந்தாரம்பட்டி செல்கின்ற சாலையில், செந்தாரம்பட்டி ஏரிப் பகுதியை அகலப்படுத்தி, தடுப்புச் சுவர் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய விவரம் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடிதமாகவும் கடந்த வாரம் அதைத் தந்திருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்து வருகிறது. நிதிநிலைமைக்கேற்ப அதைப் பரிசீலிக்கலாம்.